**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.118/2022**

**PW7**

| | | |
|---|---|---|
| **Name** | : | ராமச்சந்திரன் |
| **Father's Name** | : | பெரியதம்பி |
| **Village** | : | புதுப்பாளையம் |
| **Taluk/District** | : | செங்கம் |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.02.2026.

A2, 4 to 7 present. A1 absent. Petition u/s 317 crpc allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுப்பாளையத்தில் வசித்து ஆட்டோ ஓட்டிவருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு புதுப்பாளையத்தில் இருந்து செங்கம் நோக்கி எனது ஆட்டோவில் சென்று கொண்டிருந்தபோது புதுப்பாளையம் பெணக்ள் மேல்நிலைப்பள்ளி வேகத்தடை அருகில் புதுப்பாளையம் போலிசார் எனது ஆட்டோவை மடக்கி என்னிடமும் எனது நண்பர் சந்திரனிடமும் வெற்றுபேப்பரில் கையெழுத்து பெற்றுகொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பேப்பர்தான் அது. பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ.1.** தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டபப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ.**2.தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டபப்படும் மற்றொரு கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ.**3. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையில் கடந்த 18.01.2022 ம் தேதி காலை 7 மணி அளவில் நானும் எனது நண்பர் சந்திரனும் எங்கள் சொந்த வேலை காரணமாக இரு சக்கர வாகனத்தில் புதுப்பாளையம் மெயின்ரோட்டில் உள்ள TNCC குடோன் அருகே உள்ள கல்லாற்று ஓடை தரைபாளம்

அருகே சென்றுகொண்டிருந்தபோது அங்கு புதுப்பாளையம் போலிசார் நின்றுகொண்டிருந்தார்கள் என்றும் அதைபார்த்து என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் என்று நாங்கள் ஒரு புதுப்பாளையம் காவல் நிலைய குற்ற எண். 327/2021 ன் வழக்கு சம்மந்தமான சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் சாட்சி அளிக்கும்படி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதின் படி நாங்கள் சாட்சிகளாக இருந்து அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில கையொப்பம் செய்தோம் என்றும் எங்கள் முன்னிலையில் அந்த இடத்திலிருந்த TN 25 EC 4658 என்ற பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தை ஒரு கைப்பற்றுதல் மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும் அதில் நானும் எனது நண்பரும்சாட்சி கையொப்பம் இட்டோம் என்றும் பின் அதே இடத்தில் இருந்து ரத்தம் தோய்ந்த தார் ஜல்லிக்கல் மற்றும் ரத்தம் தோயாத தார் ஜல்லிக்கல் ஆகியவை ஒரு கைப்பற்றுதல் மகஜரில் எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும் அதில் நானும் என் நண்பர் சந்திரனும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்று சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரிய்லல.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u> இல்லை.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.